**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29-ம் நாள் புதன்கிழமை

**<u>O.S. No.20/2025</u>**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW.3 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A. LL.B., (HONS) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேகர் | தாலுக்கா | : | கூத்தாநல்லூர் |
| த/க/பெ. | : | ராஜமாணிக்கம் | கிராமம் | : | அம்மையப்பன் |
| | | | தொழில் | : | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு) |
| | | | வயது | : | 64 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வட்டார வளர்ச்சி அலுவலருக்காக சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 2013 ம் வருடமும் 2025 ம் வருடமும் நான் வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரியவில்லை என்றால் சரிதான். பொதுவாக வட்டார வளர்ச்சி அலுவலர் தான் அந்ததந்த வட்டார நலத்திட்டங்களுக்கும் பொறுப்பு அதிகாரி என்றால் சரிதான். புதுக்குடி கிராமத்திற்கும் வட்டார வளர்ச்சி அலுவலர் தான் நலத்திட்டங்களுக்கு பொறுப்பு என்றால் சரிதான். ஒவ்வொரு கிராமத்திற்கும் வட்டார வளர்ச்சி அலுவலர் சென்று பார்ப்பதுண்டா என்றால் பார்க்கலாம். துணை வட்டார வளர்ச்சி அலுவலரை அனுப்பி பார்ப்பார். நலத்திட்டங்களுக்கு திட்ட அலுவலர் என்ற ஒரு அதிகாரி உள்ளார் என்றால் சரிதான். அவர்தான் நலத்திட்டங்களை பொறுத்து வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அறிக்கை கொடுப்பார். அந்த திட்ட அலுவலர் பதவி இன்றும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் திட்ட அலுவலருக்கு அனுப்பி தபாலானது "No such designation" என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி அனுப்பிய வா.சா.ஆ.2 அறிவிப்பை வட்டார வளர்ச்சி அலுவலர் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். பொதுவாக நலத்திட்டங்களுக்கு பலன்பெறுவருக்கு அந்த இடத்தின் பட்டா அவரது பெயரில் இருக்க வேண்டும் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு சம்மந்தப்பட்ட கோப்பினை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டதில் 684/2010 அ 6 ன் படி ஒரு வீடு 1ம் பிரதிவாதியின் பெயரில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 684/2010 அ 6 ன் கோப்புகளை நான் நீதிமன்றத்திற்கு எடுத்து வரவில்லை.

வழக்கின் எதிர்வழக்குரையின் விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதிக்கு எதன் அடிப்படையில் புல எண்.83/15 ல் வீடு கட்டி தரப்பட்டுள்ளது என்றால் பட்டாவினை பரிசீலனை செய்து கட்டித்தரப்பட்டது. எனது எதிர் வழக்குரையில் 1ம் பிரதிவாதிக்கு புல எண்.83/15 ல் பட்டா உள்ளது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக வீடு கட்டி தரும் திட்டத்திற்கு சிமெண்டிற்கும், கம்பிகளுக்கும் நாங்கள் பொருளாக கொடுத்துவிடுவோம். மற்றதை பயனாளிகள் நாங்கள் தரும் பணத்திலிருந்து வாங்கி கட்டிக்கொள்ள வேண்டும். பொதுவாக வீடு கட்டியதற்கு பிறகு துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சென்று ஆய்வு செய்வார். அவ்வாறு பிரதிவாதி கட்டிய வீட்டினை ஆய்வு செய்தார்களா என்றால் அதற்கான ஆவணமும் உள்ளதா என்றால் குடவாசல் அலுவலகத்தில் உள்ளது. நான் அலுவலகத்திற்கு செல்லவில்லை. அதனால் எடுத்து வரவில்லை. 1ம் பிரதிவாதி மேற்படி வீட்டில் கழிப்பறை கட்டியுள்ளாரா என்றால் கட்டியுள்ளார். பிரதம மந்திரி ஒவ்வொரு வீட்டிற்கும் கழிப்பறை அவசியம் என்று சொல்லியுள்ளதால் அந்த வீட்டிலும் கழிப்பறை கட்டப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி கழிப்பறைக்கு எங்கள் அலுவலகத்தில் கொடுத்த மானிய தொகையை வைத்து வாதியின் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 அறிவிப்பை பெற்ற பிறகோ வழக்கு தாக்கல் செய்த பிறகோ 1ம் பிரதிவாதி வாதியின் இடத்தில் ஆக்கிரமித்து செய்து கழிப்பறை கட்டியுள்ளாரா என்று ஆய்வு செய்யப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோப்பினை பார்த்தால் தான் தெரியும்.

**(வழக்கிறஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.29 16:47:52 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal